# கொழும்பில் தினமும் சுற்றிவளைப்பு, தேடுதல்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 25 இதழ் 27
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-3-1994


(கொழும்பு)
கொழும்பு நகரில் ஏதாவது ஒரு இடத்தில் தினமும் சுற்றிவளைப்பு, தேடுதல் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் காவலுக்கு நிற்க பொலிஸார் வீடு வீடாகச்சென்று தேடுதல் நடத்தி கொழும்பில் தமிழ் இளைஞர் கைது செய்யப்படுகின்றனர்.

இதைத்தவிர முப்படையினரும் பொலிஸாரும் தனித்தனியான பாதைத் தடைகளைப் போட்டு தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் கைதுசெய்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு என்றும் என்ன, மலையகம் என்றும் என்ன தமிழ் இளைஞர்கள் அங்கே கைது செய்யப்படு
(4ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மகளிர் தினம் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
சர்வதேச மகளிர் தினம் நேற்று தமிழீழ மக்களால் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. பெண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்தும் பல்வேறு பதாகைகளும் வளைவுகளும், கொடிகளும் எங்கும் கட்டப்பட்டிருந்ததுடன் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

பெண் எழுச்சியை குறிக்கும்; பல்வேறு நிகழ்ச்சிகளும் குடாநாட்டில் பல பாகங்களிலும் நேற்று நடைபெற்றன.

மகளிர் தினத்தையொட்டி விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடத்தப்பட்ட இலக்கிய ஒவியப்போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரி
(4ம் பக்கம் பார்க்க)

★ கிழக்கு தேர்தல் முடிவுகள்

# இராணுவம் மீதான தமிழரின் வெறுப்பையே காட்டுகிறது!

## மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கணிப்பு

(யாழ்ப்பாணம்)

நடந்துமுடிந்த உள்ளூராட்சி பிரதேச சபைகளுக்கான தேர்தல் இராணுவத்தின் மீது கிழக்கு மக்கள் கொண்டுள்ள வெறுப்பையே வெளிக்காட்டுவதாக சிறி லங்கா இராணுவத் தலைமை மேலாளர் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவடைந்ததும், தேர்தல் தொடர்பாகச் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மக்கள் இராணுவம் மீது வெறுப்படைந்துள்ளனர். அவர்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். அரசாங்கம் ஒப்பீட்டளவில் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறது ஆனால் தேர்தல் நடைபெறும்போது பெரும்பகலான வைகள் மூடப்பட்டிருந்தன என்றும் தெரிவித்த அவர், தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சிறிலங்காவில் சிறுபான்மை இனத்தவர்களாக இருப்பினும், அவர்கள் பல பகுதிகளில் வாழும் பகுதிகளில் பெரும்பான்மையாகவே உள்ளனர். ஆனாலும் அந்நிலைமை இலகுவான நிலையில் இருந்து வெகு தொலைவிலேயே உள்ளது எனவும் கூறினார். -இ

## உடனடியாக யுத்த நிறுத்தம் பேச்சு நடத்தக் கோருவர்

(யாழ்ப்பாணம்)
உடனடி யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தை மூலமும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்று இலங்கை, இந்திய இளைஞர் பேரவையினர் அரசிடம் கோரிக்கை விடப்படவுள்ளது.

எதிர்வரும் 26ம், 27ம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்திய இளைஞர் பேரவையின் தேசிய மாநாட்டின் மூலம் இக்கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை எதிர்வரும் 12ம் திகதி யாழ்ப்பாணத்தில்கூடி முடிவு செய்யவுள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்று அதிகாலை 1 மணிமுதல் சுற்றுப்புறக்குடியிருப்புப் பகுதிகளான அவ்வெட்டி, மல்லாகம், ஏழாலை குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தின்போது அப்
(4ம் பக்கம் பார்க்க)

## ரிச்சர்ட் கொலை விசாரணைக்கு கோரிக்கை

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் படுகொலை செய்யப்பட்ட ரிச்சர்ட் டி சொய்சாவின் கொலை குறித்து மீள் விசாரணை செய்யுமாறு ஜனாதிபதி டி. பி.விஜேதுங்கவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ரிச்சர்ட் டி சொய்சா கைதுசெய்யப்பட்டவேளையில் பொலிஸ் அதிகாரி ரோனி குணசிங்கவும் உடன் இருந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இ-ச

## பீரங்கிப் படகுகள் பெற சர்வதேச ரெண்டர்

(கொழும்பு)
கடற்புலிகளின் பலம் அதிகரித்து வருவது குறித்து கடற்படை வட்டாரங்களில் அதிர்ச்சி தெரிவிக்கப்படுகிறது.

கடற்புலிகளை சமாளிப்பதற்கு பீரங்கி படகுகள் இருப்பது அவசியம் என கடற்படைதளபதி பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியுள்ளதையடுத்து பீரங்கிப் படகுகள் வாங்குவதற்கான சர்வதேச ரெண்டர் கோருவதற்கான நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

முன்னர் இஸ்ரேலில் இருந்து பீரங்கிப்படகுகள் வாங்கப்பட்டன. கொழும்பில் இயங்கிவந்த நலன் காக்கும் பிரிவு மூடப்பட்டதை அடுத்து பீரங்கிப் படகுகளையும் ஆயுதங்களையும் இலங்கைக்கு வழங்குவதை இஸ்ரேல் நிறுத்திக்கொண்டது. (இ)

## மாநகர சபை அங்கத்தவர் களவு முயற்சியில் ஈடுபட்டது கண்டுபிடிப்பு

(கொழும்பு)
அநுராதபுரத்தில் புராதன தொல்பொருட்களை தோண்டி எடுத்து அவற்றைக் களவாடும் சம்பவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண சபையைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் உட்பட ஆறுபேர் இதுதொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புராதனப் பொருட்களைத் தோண்டி எடுத்து அவற்றை பெருந்தொகையான விலைக்கு வெளிநாட்டவர்க்கு விற்பதே இந்த கோஷ்டிக் கும்பலின் வேலையாகும். -இ

## யாழ். மாவட்டத்தில் மலேரியா வாரம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் பரவி வரும் மலேரியா நோயினையும் அது ஏற்பட ஏதுவாயிருக்கும் புறக்காரணிகளையும் தடுப்பதற்கென இம்மாதம் 18-ம் திகதிமுதல் 25-ம் திகதி வரை "மலேரியா தடை வாரம்" அனுஷ்டிக்கப்பட
(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை, இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

● தமிழக மீனவர் விவகாரம்:

# இந்திய இலங்கை அதிகாரிகள் கொழும்பில் நேற்று பேச்சு

(கொழும்பு)
பாக்குநீரிணை கடற்பகுதியில் மீன்பிடிப்பது குறித்த பிரச்சினைகள் தொடர்பாக இந்திய இலங்கை உயர் அதிகாரிகளுக்கிடையே நேற்று கொழும்பில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

இந்திய அரசு சார்பில் வெளியுறவுத்துறை உள்துறை பாதுகாப்புத்துறை ஆகிய அமைச்சுக்களின் இணைச் செயலாளர்களும், தமிழக அரசின் மீன்வளத்துறை செய
(4-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

உன் நோக்கத்தை யாரால் சாதித்துக் கொள்வதைவிட கிரித்த முகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

— ஷேக்ஸ்பியர்

# தெற்கில் தேர்தல் வெற்றிக்கு வடக்கில் இராணுவ தாக்குதல்

(கொழும்பு)

தென்மாகாண சபைக்கு மாத இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன் வடக்கில் ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு அதன் மூலம் ஏதாவது வெற்றியை பெற்றுவிட வேண்டுமென அரசு முனைந்து வருகிறதாம்.

தென் மாகாணசபைத் தேர்தல் அரசினதும், எதிர்க்கட்சிகளினதும் எதிர்காலத்தை நிர்ணயிக்க இருப்பதால் இத்தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. தற்போதைய நிலையில் இத்தேர்தலில் வெற்றி பெறுவதென்பது அரசுக்கு மிகவும் சிரமமான விடயமாகும்.

எனவே வடக்கில் இராணுவத் தாக்குதல் மூலம் ஏதாவது வெற்றி கிடைத்தால் அதைப் பெரும் பிரசாரமாக்கி வாக்காளர்களைத் திசை திருப்பலாமென அரசு நம்புகிறது. இதற்காகவே வடக்கு நோக்கி ஆயிரக்கணக்கான படையினர் நகர்த்தப்பட்டு வருகிறார்களாம்.

எனினும் இராணுவத்தின் புதிய தாக்குதல் புலிகளால் முறியடிக்கப்பட்டு படையினருக்குப் பாரிய சேதம் ஏற்படுமானால் அதுவே ஆளும் ஐ. தே. க. வின் சகல தோல்விகளுக்கும் வழிவகுத்துவிடுமெனவும் அவதானிகள் எச்சரித்துள்ளனர். (இ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ஹென்றிஸ் எதிர் சென். நீக்கிலஸ் மோதுகின்றன. இப்போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் மைதானத்தில் நடைபெறும். இ

## நமது நோக்கு

### கனடா கசக்கிறதா?

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு வெளிநாடுகளின் தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மீண்டும் அறிவித்துள்ளார்.

கனடாவிலுள்ள சில குழுக்கள் இங்குள்ள இனச் சிக்கலுக்கு அமைதித் தீர்வுகள் பற்றி ஆலோசிக்க தொண்டமானுக்கு அழைப்பு விட்டார்கள். இதுபற்றித் தொண்டமான் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார். இதற்கான பதிலிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை தொண்டமானைக் கனடாவுக்கு அழைத்தவர்கள் யார்? அவர்களின் பின்னணி என்ன என விசாரித்து இலங்கை அரசு கனேடியச் சட்ட நிபுணர் மார்க்ஸ் பேக்கருக்கு கடிதம் எழுதியது.

இதற்கு அவர் கொடுத்த பதில் என்ன? ஏற்கனவே தான் அரசுக்கு அனுப்பிய இரு கடிதங்களுக்கும் அரசு பதில் எழுதாது புறக்கணித்து விட்டது. அவற்றிற்கான பதில் கிடைத்ததும் தனது பதில் அனுப்பப்படும் என முகத்தில் அறைந்தாற் போல் காரசாரமாக எழுதியுள்ளார்.

இலங்கை அரச பயங்கரவாதம் பற்றிப் பல தகவல்களைக் கனடா பெற்றிருப்பதாகவும் பெருந் தன்மையோடு கனடா அனுப்பிய பொருளாதார உதவிகள் இங்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவலையோடு கவனித்துவருகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பொதுநலவாய நாடுகளில் ஒன்றென்ற ரீதியில் இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் கனடா தொழில் நுட்ப உதவிகளையும் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி உதவிகளையும் பெருமளவில் அளித்து வந்தது.

அந்த ரீதியில் இங்கு உள்நாட்டு யுத்தத்தினால் நாடு சீரழிந்து போவதைத் தடுத்து நிறுத்த சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல உதவக் கனடா விரும்புவதில் நியாயமிருக்கிறது.

அரச பயங்கரவாதத்தால் தமிழ் மக்கள் பெருமளவிற் புலம் பெயர்ந்து கனடாவிற்குச் சென்றுள்ளார்கள். அவர்களுக்குப் புகலிடம் கொடுத்து வரும் கனடா' மக்களைப் பெருமளவில் அகதிகளாக்கும் யுத்தநிலையைச் சீராக்கி அமைதி காக்கஉதவ முன் வருவதை வேண்டாத தலையீடு என ஜனாதிபதி தட்டிக் கழிப்பது நியாயமானதா?

வாங்கு மட்டும் வாங்கி விட்டு தற்போது சீனு போன்ற புதிய நண்பர்கள் யுத்த தளபாடங்கள் தருகிறோம்என்று தட்டிக் கொடுப்பதால்பழையதன் பர்களை கைவிடுவது நாட்டுக்கு நன்மை பயக்குமா?

## இராணுவத்தின் பலவீனம் வெளிப்படுகிறது

(பூநகரி)

பூநகரி இராணுவ முகாம் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசு கூறி வரும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அடிக்கடி நடைபெறுவதானது இராணுவத்தினது பலவீனமான நிலையையே காட்டுவதாக பி. பி. ஸி. தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

அச் செய்தி மேலும் தெரிவிக்கையில்: இவ்வருட ஆரம்பத்திலிருந்து வடபகுதியில் இதுவரை சிறு சிறு மோதல் சம்பவங்களே நடந்துள்ளன. விடுதலைப் புலிகளின் பூநகரித் தாக்குதலையடுத்து வவுனியாவில் கடந்த ஞாயிறன்று படையினர் தாக்குதல் நடாத்தினர் எனினும் எதிர்பார்த்த விளைவு எதுவும் ஏற்படவில்லை.

மேற்படி இரு தாக்குதல்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவத்தின் பலவீனமான மனோநிலையையே காட்டுவதாக உள்ளதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. -க-இ

## வெலஹுனில் அரசியல் கொலைகளுக்கு மரண தண்டனை

(பெய்ரூத்)

லெபனானில் அரசியல் கொலைகளுக்கு மரண தண்டனை வழங்கும் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படவுள்ளதாக லெபனான் தகவல் அமைச்சர் மைக்கல் சமாஹா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்த தகவல் அமைச்சர் அண்மையில் கிறீஸ்தவ தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டதைய டுத்தே இச்சட்டத்தை மீண்டும் கொண்டுவர லெபனான் அரசு முடிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

1983ம் ஆண்டிலிருந்து எவர் மீதும் மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-இ)

## இன்று

(சுன்னாகம்)

கல்லாகம் கனிஷ்ட வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு அரங்கில் இன்று 9ம் திகதி பி. ப. 2-00 மணிக்கு அதிபர் மு. அருளையா தலைமையில் நடைபெறும். -165

0 0

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று 9ம் திகதி புதன்கிழமை பி. ப. 2-00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி சின்னையா தலைமையில் நடைபெற உள்ளது. -161

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் கல்லூரி தம்பர் மண்டபத்தில் சாரண இயக்கத் தந்தை பேடன்பவல் பிரபு ஞாபகார்த்த விழா நடைபெறும்.

## விண்ணப்பங்கள் பார்வைக்கு

(பருத்தித்துறை)

1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப விபரங்கள், தேசிய ஆங்கில தராதரப்பத்திரப் பரீட்சைக்கான விண்ணப்ப விபரங்கள், அவுஸ்திரேலிய அரசின் அவுஸ்திரேலியா அபிவிருத்தி ஒத்துழைப்பு புலமைப்பரிசில் விண்ணப்ப விபரங்கள் என்பன பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொதுசன நூலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக புலோலி பொதுசன நூலக பிரதம நூலகர் திரு. ஏ. என். எஸ் திருச்செல்வம் அறிவித்துள்ளார். (52-இ)

## இருநாள் நடைபெறும் சைவசமய பெருவிழா

(உடுவில்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான ஆதரவில் சைவசமய பெருவிழா ஒன்றினை நடாத்த உள்ளனர்.

சன்மார்க்கசபையின் மணிவிழா நிகழ்ச்சி தொடக்க விழாவினை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் மார்ச் 13, 14-ஆம் திகதிகளில் நடாத்துகின்றனர்.

முதல் நாள் நிகழ்வில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் பல ஆய்வுரைகளை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நிகழ்த்த உள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் பல்கலைக்கழக பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறும். கருத்தரங்கு இசைநடையில் உரைநடைக் கோவை ஆகியன அன்று நடைபெறும். 109-இ

## இன்று வண்ணை சிவன் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவில் வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை காலை 11-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 20 நாட்கள் உற்சவம் நடைபெறும்.

இம் மாதம் 24ம் திகதி இரவு 7-00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 26ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு தேர் உற்சவமும் 27ம் திகதி முற்பகல் 10-30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெற்று 28ம் திகதி பூங்காவன உற்சவமும் தொடர்ந்து சண்டேஸ்வரர் உற்சவமும், வைரவர் பூஜையுடன் உற்சவம் நிறைவுறும்.

உற்சவகாலங்களில் தினமும் மாலை அறிஞர் பெருமக்களின் சமய சொற்பொழிவுகளும் இடம்பெறும். க-சி

## தென் பகுதிக்குள் ஐ. தே. க. வேட்பாளர் செல்ல மக்கள் தடை

(கொழும்பு)

தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களை அந்தப் பகுதிக்கு வர விடாது அங்குள்ள மக்கள் தடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17 வருட ஆட்சிக் காலத்தில் ஐ. தே. க. அரசு தென் மாகாணத்தின் கிராமப் பகுதிகளில் எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளவில்லை என சுட்டிக்காட்டியே அப்பகுதி மக்கள் இவ்விதம் செய்துவருகிறார்களாம்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஐ. தே. க. வேட்பாளர்கள் அந்தப் பகுதிகளுக்கு செல்லும்போதே அவர்கள் அங்கு பிரவேசிக்க முடியாது தடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. -இ

## இராசி பலன்

09 - 03 - 1994

புதன்கிழமை

(தமிழுக்கு மாசி 25)

துவாதசி மு. ப. 10-49 வரை, திருவோணம் மு. இ. 7-27 வரை, இராகுகாலம் நண்பகல் 12-24 முதல் 1-54 வரை, சுபநேரம் மாலை 4-54 முதல் 6-24 வரை, பிரதோஷ விரதம்.

மேஷம்: தொழில் லாபம், பிறர் நன்மை, வாக்குவன்மை

இடபம்: உற்சாகக் குறைவு ரோகபீடை, அலைச்சல்.

மிதுனம்: சத்துரு பீடை, திருட்டுப் போதல், கலகம் கொள்ளல்.

கடகம்: தனச் செலவு, தொழில் முயற்சி, மனைவி பெருமை.

சிம்மம்: இஷ்டசித்தி, மனை மாற்றம், நண்பர் சகவாசம்.

கன்னி: சென்ற இடத்தில் விரோதம், மனக்குறை, திகைப்பு.

துலாம்: வெளியார் குற்றம், கடன்சுமை, வேதனை.

விருச்சிகம்: வசதி வாய்ப்பு, சகோதர நன்மை, பணப் புழக்கம்.

தனுசு: விதண்டாவாதம், குடும்பபெருமை, நற்காரியம்.

மகரம்: முரண்டுபிடித்தல், குடும்ப உறவில் விரிசல், மனப் பயம்.

கும்பம்: புத்தி சஞ்சலம், விரோதிகள் தும்பம், காரியத் தடை.

மீனம்: கஷ்டநிலை, வீட்டில் கலகலப்பு, தொழில் சிறப்பு.

— ஜோஸ்யர்.

## பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அடுத்த 5 வருடத்துக்கு புதிய உறுப்பினர் நியமனம்

(கொழும்பு)

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நியமித்துள்ளார்.

நேற்றையதினத்திலிருந்து 5 வருடங்களுக்கு இக்குழுவின் அங்கத்தவர்களாக இவர்கள் கடமைபுரிவர்.

இக்குழுவின் அங்கத்தவர்கள் வருமாறு:- தலைவர் பேராசிரியர் பி. எல். பண்டிதரத்ன, உபதலைவர் பேராசிரியர் எம். பி. இரத்னசிறி மற்றும் டாக்டர் எஸ். எம். ஏ. பெரேரா, திரு. கே. துரைராஜா, டாக்டர் பி. எம். நிலமே, ஜனாப் எஸ். எச். எம். மஃரூப், திரு. டி. பி. ஜ. த. எஸ். சிறிவர்த்தன ஆகியோர் உறுப்பினர்களாகச் செயலாற்றுவார்கள். -க-இ

## தவக்கால நற்சிந்தனை

"நம் கடவுளாகிய ஆண்டவரை நாம் மன்றாடுகிற போதெல்லாம் அவர் நமது அண்மையில் தானே இருக்கிறார்."

உப. 4:7)

அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன். இது இறைவனின் ஆறுதல் வாக்கு. என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடும். இது எமக்கு அறிவுரை. எமக்கு என்ன நேர்ந்தாலும் நாம் அவரை வேண்டினால் துன்பம். அத்தனையையும் போக்கிடுவார்.

-ஜோ. து.

நிலம் அரித்து நீர் மூடும்-மூடாது நலமறிந்து மரம் நடுமிடத்து

# "தமது சொந்தக் கால்களில் பெண்கள் நிற்க வேண்டும்"

## மகளிர் தின விழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

பெண்கள் தமது சொந்தக் கால்களில் நிலை கொள்ள வேண்டும். போராட்டங்களில் பெண்கள் புரிந்த வீர சாதனைகள் அவர்களின் சமயோசித அணுகு முறைகள் அவர்கள் ஈட்டிய வெற்றிகள் எதிர்காலப் பெண்ணினம் அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று இளம் கலைஞர் மன்றத்தில் நடைபெற்ற அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்பட்ட இலக்கிய ஓவியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில் தலைமையுரை ஆற்றிய தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் செல்வி இளவழனி தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே ஒரு சமூகப் போராட்டமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது இன்றைய காலகட்டத்தில் ஒரு தேவையாகவும் உள்ளது.

பெண்களால் செய்ய முடியாதது ஒன்றில்லை. ஆண்களை நம்பி இருந்ததினால் தான் பெண்ணினத்துக்கும் பின்னடைவு ஏற்பட்டது. சீதனக் கொடுமைகளினால் பெரும்பாலான பெண்கள் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் மகளிர் அணி சிறப்புத்தளபதி செல்வி செங்கி ஜெனா பரிசில்களை வழங்கினார். தமிழீழ காவல்துறைக் கலிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் செல்வி நா. சிவஞானசரஸ்வதி, திருமதி ஆதிலட்சுமி சிவகுமார், வெளியீட்டுப் பிரிவுத் துணைப் பொறுப்பாளர் செல்வி சுதாமதி மாவீரர் பணிமனை பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஈகைச் சுடரை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். (162 - சி)

# இரத்தம் தோய்ந்த மண்ணை மண்டியிடுகிறோம்

## - அருட்திரு இம்மானுவேல்

(யாழ்ப்பாணம்)

"யாழ். திருச்சபை இரத்தம் தோய்ந்த இந்த மண்ணை மண்டியிடுகின்றது. போர் நிகழ்வுகள், குண்டு வெடிப்புகள் தரும் செய்திகள் செவிமடுக்கின்றது."

இவ்வாறு யாழ். மறைமாவட்ட முதல்வர் அருட் கலாநிதி என். ஜே. இம்மானுவேல் அடிகளார் நேற்று புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பமான மேய்ப்புப் பணி மாநாட்டு சிறப்புரையின்போது குறிப்பிட்டார்.

ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஆரம்பமான இம்மாநாட்டில், ஆங்கிலிக்கன் திருச்சபை தென்னிந்திய திருச்சபை ஆயர் பிரதிநிதிகளுடன் மன்னார் மாவட்ட ஆயர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

இந்த மாநாடு தொடர்ந்து வரும் 14ம் திகதிவரை நடைபெறும். -சே

# பனை மரம் தறிப்பதற்கு அரசு தடை விதித்துள்ளது

(கொழும்பு)

பனைமரம் தறிக்கப்படுவதை அரசாங்கம் தடைசெய்துள்ளது. கடற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஆர். எம். தர்மதாச பண்டா, 1993ஆம் ஆண்டின் மரங்களை தறித்தல் கட்டுப்பாட்டு சட்டத்திற்கு அமைய இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கமைய பனைமரம், பலாமரம், ஈரப்பலா தறிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபை இந்த நடவடிக்கையை பெரிதும் வரவேற்றுள்ளது. -கே-சி

## ம. நோ. கூ. ச. சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான அவசரமான சந்திப்பு, பொது நிர்வாகத் தொடர்பக மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களை இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. -சி

## ★ பாலியல் குற்றச்சாட்டு

# ஏழு மாணவர்களுடன் தங்கிய பிரிட்டிஷ் பிரஜை கைதானார்

(கொழும்பு)

இலங்கைக்கு வந்துள்ள உல்லாசப் பிரயாணி ஒருவருக்கு எதிராகப் பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களுடன் இவர் பாலியல் தொடர்புகளை வைத்திருந்ததாகப் பொலிசார் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட இந்த பிரிட்டிஷ் உல்லாசப் பிரயாணி நீர்கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டபோது தாம் தங்கியிருந்த விடுதியில் 7 பாடசாலை மாணவர்களுடன் இவர் காணப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வறுமை நிலையில் உள்ள இவர்களுக்குப் பணத்தையும் அன்பளிப்புப் பொருட்களையும் கொடுத்து விடுதிகளுக்கு அழைத்து, இத்தகைய பாலியல் நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்துவதில் ஒரு குழுவே இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இ

## நோயாளர் அனுமதி

(நெல்லியடி)

மலேரியாக் காய்ச்சலினாலும் நெருப்புக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்ட சுமார் 50க்கு மேற்பட்ட நோயாளர்கள் மந்திகை மருத்துவமனையில் சாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 160

## செங்கிருமியாவிற்கு மூவர் பலியானார்கள்

(யாழ்ப்பாணம்)

செங்கிருமிமை நோயினால் பீடிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்றும் ஒரு குழந்தை அங்கு மரணமானது

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த எஸ். நிசாந்தன் (வயது 8) என்ற ஆண் குழந்தையே மரணமான குழந்தையாகும்.

நேற்றுமுன்தினமும் இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் ஒருகுழந்தையும், ஒரு வயோதிபரும் மரணமடைந்துள்ளனர். -சி

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

(அச்சுவேலி)

நேற்றுமாலை 4 மணியளவில் அச்சுவேலி, கோப்பாய், பூம்புகார் பகுதிகளில் ஹெலி ஒன்று வட்டமிட்டபடி துண்டுப் பிரசுரங்களை போட்டுச் சென்றது இத்துண்டுப்பிரசுரங்கள் யாழ். கரையோரப் பகுதிகளிலும் கடலிலும் விழுந்தன. -69-சி

## விமான விபத்தில் பத்து பயணிகள் பலி

(புதுடில்லி)

இந்திரா காந்தி சர்வதேச விமானநிலையத்தில் நேற்று ஏற்பட்ட விபத்து ஒன்றில், 10 பயணிகள் பலியானார்கள். 7 பேர் காயமடைந்தனர்.

மேற்படி விமானநிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திய எயார்லைன்ஸ் விமானம் ஒன்றில் எரிந்துபோன விமானம் ஒன்றின் சில சிதைவுகள் தெறித்து விழுந்ததால், இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கே-இ-சி

### தமிழக மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாளரும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இன்றும் தொடரும் என தெரிவிக்கப்பட்டது. -கே-சி

### சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சளிப்பு விழா நல்லூரில் நடைபெற்றது.

யாழ். மாநகரசபை மன்றத்தால் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தினவிழா நேற்றுக்காலை நாவலர் கலாசாரா மண்டபத்தில் நடைபெற்றது தென்மராட்சி, அரியாலை உட்பட பல இடங்களில் நேற்றிரவு எழுச்சிக் கூட்டங்களும் நடைபெற்றன. (சி)

## வெண்காயம் திருட்டு

(நெல்லியடி)

தோட்டத்தில் பிடுங்கி வைக்கப்பட்ட சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான வெண்காயம் திருடர்களினால் களவாடப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மந்திகை சாந்தியூரில் நிகழ்ந்துள்ளது. இது பற்றி தோட்ட உரிமையாளர் க. பசுபதி, பருத்தித்துறை காவல் பணிமனையில் முறையிட்டுள்ளார். 160

## இளம் குடும்பஸ்தர் சுருக்கிட்டு தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீட்டுக்குச் சென்று மனைவியுடன் தகராறுபட்டபோது மனைவி பயத்தினால் கதவைப்பூட்டிக்கொண்டு உள்ளே இருந்து விட்டு சில மணிநேரங்களில் கதவைத் திறந்து வெளியே வந்தபோது கணவன் விருந்தையில் சுருக்கிட்டு தொங்கிக்கொண்டிருந்ததாகவும் அயலவரின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது இறந்ததாகவும் மனைவி ஒருவரால் தெரிவிக்கப்பட்டு ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை 12-30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தின் கழுத்தில் சுருக்கிட்டதற்கான அடையாளம் காணப்பட்டது.

கோண்டாவிலைச் சேர்ந்த கார்த்திகேசு விநாயகபாலன் (வயது 37) என்ற குடும்பஸ்தரே சடலமாக ஒப்படைக்கப்பட்டவராவார். (சி)

### கடனடியாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தேசிய மாநாட்டில் பூட்டப்பட்டுள்ள சகல இந்து ஆலயங்களும் திறக்கப்பட்டு, அங்கிருந்து இராணுவம்வெளியேற வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. -சி

### யாழ். மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

யாழ் செயலகத்தில் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் அரச அதிபர் பிரதேச செயலர்கள், சுகாதார வைத்திய அத்தியட்சகர், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

மலேரியா தடைவாரம் யாழ். மாவட்டம் முழுவதும் அவ்வப் பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் தலைமையில் நடைபெறும். இத்தடைவாரத்தின் போது மக்கள் மத்தியில் மலேரியா நோயின் தாக்கம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுடன் கழிவுநீர் செல்லும் வடிகால்கள் நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் என்பன துப்பரவு செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தினூடாக மலேரியா நோய் ஏற்படக்கூடிய காரணிகளை அப்புறப்படுத்தி மலேரியா நோயின் தாக்கத்தை யாழ். குடாநாட்டில் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மலேரியா நோய் சம்பந்தமாகவும் அதன் தாக்கங்கள் குறித்தும் மக்களுக்கு கருத்துக்கள் வழங்கப்படவுள்ளது. (158 -162-சி)

### பலாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தபோதிலும், மக்கள் எவரும் காயமடையவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கும் இதேபோல ஷெல் தாக்குதல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. -சி

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என்றும், இடையிடையே இத்தகைய சோதனைகள் அவர்கள் படையினரால் கடுமையாகத் துன்புறுத்தப்படுகிறார்கள் என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரிலுள்ள சைவ ஹோட்டல்கள், கடைகள் ஆகியவற்றில், படையினரின் சோதனைகளால் வேலையாட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## காட்டிற்குள் வழிதவறிய வயோதிப மாது மரணம்

(சாவகச்சேரி)

கிளாலிக் கடற்கரையை அண்டிய காட்டுப் பகுதிக்குள் வழிதவறிச் சென்று, இரண்டு நாட்களாக நீர், உணவு எதுவுமின்றிச் சோர்வடைந்த வயோதிப மாது மரணமானார்.

கடந்த 7ம் திகதி இக்காட்டுப் பகுதியில் மயக்கமடைந்த நிலையில் கிடந்த வயோதிப மாது அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு, சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் மரணமானார்.

சுமார் 70 வயது மதிக்கத்தக்க இவ்வயோதிப மாதுவின் சடலம், உறவினர் எவரும் உரிமை கோரப்படாத நிலையில் மரண விசாரணையின் பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. 155-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

## புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் கயசார்பு நோக்கிய பொருண்மிய மேம்பாட்டு வேலைத் திட்டங்களில் 12 துறைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவ் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்களை கிராம மட்டங்களில் முனைப்பாக்கி செயற்படுத்த கிராமிய உற்பத்திக் குழுக்களை முழுஅளவில் ஈடுபடுத்தும் நோக்கில் கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களுக்கு பல் துறைகளிலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக தற்போது முழுஅளவில் இயங்காமலிருக்கும் உற்பத்திக்குழுக்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.